நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஆகஸ்ட் திங்கள் 11-ம் நாள் செவ்வாய்க்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் : 527 / 2024

CNR.No.TNTT07-014855-2024

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண். 536/2024 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர் |
| | எதிரியின் விபரங்கள் | |
| 3 | பெயர் | அலெக்ஸாண்டர் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | சுப்பையா |
| 5 | வேலை | - |
| 6 | முகவரி | சண்முகா நகர், தொழிற்பேட்டை எதிரில், கோவில்பட்டி. |
| 7 | வயது | 67/2024 |
| | **தேதி** | |
| 8 | சம்பவம் | 09.11.2024 |
| 9 | புகார் | 15.11.2024 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரி கடந்த 09.11.2024 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:06:56 +0530

| | | |
|---|---|---|
| 11 | பிணை விபரம் | எதிரி கடந்த 09.11.2024 அன்று காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 10.01.2025 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 10.08.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை பிரிவு 4(1)(A), 4(1)(i) of TNP Act படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை விடுதலை செய்து BNSS பிரிவு 271(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 10.12.2024 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. காளீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 10.08.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரி மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 09.11.2024 ஆம் தேதி 13.00 மணிக்கு கோவில்பட்டி எட்டயபுரம் ரோட்டில் உள்ள மூக்கரை பிள்ளையார் கோவில் அருகே எதிரி கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் 02 எண்ணம், 180 மிலி அளவு கொண்ட Vorion பிராந்தி பாட்டில்கள் 02 எண்ணம் ஆகியவற்றை அரசு

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.11 19:07:05 +0530

அனுமதியின்றி சட்டத்துக்கு புறம்பாக இலாப நோக்குடன் விற்பனைக்கு வைத்திருந்தும், மதுபாட்டில்கள் விற்று அதன் மூலம் கிடைத்த பணம் ரூ.200/– வைத்திருந்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது பிரிவு 4(1)(i) r/w 4(1)(A) of TNP Act கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230ன் படி கடந்த 10.01.2025 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரி மீது பிரிவுகள் 4(1)(A), 4(1)(i) of TNP Act படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 01.02.2025 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து BNSS பிரிவு 263ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

3) எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையான சான்றுப் பொருள்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

4) கடந்த 09.11.2024ஆம் தேதி மதியம் 01.00 மணிக்கு அசா.1 அய்யாசாமி, அசா.4 சண்முகம், முதல் நிலைக் காவலர் கணேசன் ஆகியோர்கள் அசா.4க்கு கிடைத்த ரகசிய தகவலின் படி கோவில்பட்டி மூக்கரை பிள்ளையார் கோவில் அருகே மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்த போது, சந்தேகப்படும் படி கையில் வெள்ளை நிற பையுடன் நின்று கொண்டிருந்த எதிரி போலீஸ் பார்ட்டிகளைக் கண்டதும், ஓட எத்தனித்த எதிரியை பிடித்து விசாரித்து, அவர் வைத்திருந்த வெள்ளை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:07:15 +0530

நிற பையை சோதனை செய்து பார்த்த போது அதில், அசா.பொ.1 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் 02 எண்ணம், அ.சா.பொ.2 180 மிலி அளவு கொண்ட ஓரியன் பிராந்தி பாட்டில்கள் 02 எண்ணம் மற்றும் அசா.பொ.3 மதுபானம் விற்ற பணம் ரூ.200/– வைத்திருந்துள்ளார். எதிரி சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை 13.00 மணிக்கு அசா.4, அசா.ஆ.2 அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அத்தாட்சியில் தனி நபர்கள் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகள் கையொப்பம் செய்துள்ளார்கள்.

5) பின்னர் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண் 536/2024 U/s 4(1)(i), 4(1)(A) TNP Act ன் படி அசா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை அசா.4 பதிவு செய்துள்ளார். பின்பு விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று அசா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அசா.ஆ.5 வரைபடம் தயார் செய்து, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரியை காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். படிவம் 91 அசா.ஆ.6 ஆகும். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 15.11.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 10.08.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:07:24 +0530

**பிரச்சினையும், தீர்வும் :**

7) அரசுத் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி பிரிவின் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் வழியாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் மேற்படி பிரிவின் கீழ் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதுரை எடுத்துரைத்தார்.

8) எதிரி தரப்பில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரிக்கு எதிராக நடுநிலையான சாட்சிகள் சாட்சியமளிக்கவில்லை என்றும், அசா.1 மற்றும் அசா.4 ஆகிய சாட்சிகள் காவல் துறை சாட்சிகள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எதிர்வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

9) எதிரி 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் – 2 எண்ணம், 180 மிலி அளவு கொண்ட ஓரியன் பிராந்தி பாட்டில்கள் – 02 எண்ணத்தை சட்டவிரோதமாக விற்பதற்கும், மதுபானம் விற்ற பணம் ரூ.200/– வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளார் என்பது அரசுத் தரப்பு வழக்காகும்.

10) அசா.1, அசா.4 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 09.11.2024 ஆம் தேதி 13.00 மணிக்கு போலீஸ் பார்ட்டி சகிதம் ரோந்து செய்த போது, கோவில்பட்டி, எட்டயபுரம் ரோட்டில் மூக்கரை பிள்ளையார் கோவில் அருகே கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் நின்று கொண்டிருந்த எதிரியை சோதனை செய்த போது, அ.சா.பொ.1 முதல் அசா.பொ.3 யை எதிரி வைத்திருந்ததாக சாட்சியமளித்துள்ளார்கள். அசா.4 தனது

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:07:33 +0530

சாட்சியத்தில் அ.சா.பொ.1 முதல் அசா.பொ.3 யை அத்தாட்சியில் கைப்பற்றி, வழக்கு பதிவு செய்து, புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். அசா.1 மற்றும் அசா.4 ஆகிய சாட்சிகள் காவல் துறை சாட்சிகள் ஆவார்கள். அசா.2 தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள அசா.ஆ.1 முதல் கையொப்பத்தை எங்கு, எதற்காக செய்ததாக தனக்கு ஞாபகம் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அசா.3 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

11) அசா.1 தனது குறுக்கு விசாரணையில் உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்ததாகவும், பாக்கெட் டைரியை பார்த்தால் ரோந்து பணிக்கு சென்றோமா அல்லது பாதுகாப்பு பணிக்கு சென்றோமா என்ற விபரம் துலங்கும் என்றும், பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், சம்பவ இடம் எட்டயபுரம் – கோவில்பட்டி செல்லும் ரோட்டிற்கு வடக்கு பக்கம் என்றும், சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் மூக்கரை பிள்ளையார் கோவில் உள்ளது என்றும், சம்பவ இடத்திற்கு கிழக்கே வெங்கடாசலபதி ரைஸ் மில் இல்லை என்றும், மூக்கரை பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே காம்ப்ளக்ஸ் உள்ளது என்றும், காம்ப்ளக்ஸ் கடை இருப்பதால் பொதுமக்கள் வந்து செல்வார்கள் என்றும், பொதுவாக ஒரு தனிநபர் அவரது தேவைக்கு 2 லிட்டர் மதுபானம் வைத்துக் கொள்ளலாம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12) அசா.4 தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்திற்கு கிழக்கே வெங்கடாசலபதி ரைஸ்மில் உள்ளது என்றும், அந்த ரைஸ்மில்லில் நிறைய பேர் வேலை செய்கிறார்கள் என்றும், மூக்கரை பிள்ளையார் கோவிலுக்கு வடக்கே குடியிருப்பு பகுதிகள் உள்ளது என்றும், மூக்கரை பிள்ளையார் கோவில் மேற்கே மூன்று கடைகள் உள்ளது என்றும், எதிரியிடம் யாரும் மதுபானம் வாங்கவில்லை என்றும், தனிநபர் சொந்த பயன்பாட்டிற்கு 4.5 லிட்டர் மதுபாட்டில் வைத்துக் கொள்ளலாம் என்றும், எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டிலின் அளவு 720 மி.லி. என்றும், எதிரி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.11 19:07:47 +0530

அவரது சுய உபயோகத்திற்கு மேற்படி பாட்டில்களை வைத்திருந்தால் அது சட்டப் படி சரி என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13) வழக்கு சொத்து மது பாட்டில்கள் எந்த கடையில் இருந்து விலைக்கு வாங்கப்பட்டது என்பது குறித்து புலன் விசாரணை அதிகாரி முறையாக விசாரிக்கவில்லை. மேலும் அரசு தரப்பில் எதிரி மதுபாட்டில்கள் விற்றுக் கொண்டிருந்ததாகவும் அல்லது வேறு நபர்கள் எதிரியிடமிருந்து மது பாட்டிலை அதிக விலைக்கு வாங்கிக் கொண்டிருந்ததாகவும் நடுநிலையான சாட்சிகள் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரியை குற்ற சம்பவத்துடன் தொடர்புபடுத்தும் வகையில் நடுநிலையான சாட்சிகளோ அல்லது சூழ்நிலை சாட்சியங்களோ அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்படவில்லை.

14) இந்த வழக்கில் 09.11.2024 அன்று கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் கடந்த 15.11.2024 அன்று காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசா.2 மற்றும் அசா.3 யை பிறழ்சாட்சிகளாகக் கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதும், அவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. பார்வை மகஜர் சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பு புலன்விசாரணை மீது சந்தேகம் ஏற்படுகிறது. போலீசார் சம்பவ இடத்திற்கு சென்ற போது எதிரியிடம் யாரும் மது வாங்கவில்லை என்று அசா.4 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும், மேற்படி வெள்ளை நிற பை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை.

15) அசா.1, அசா.4 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் தனி நபர்கள் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதற்கு கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்கள். மேலும், விசாரணை அதிகாரி தனி நபர்களை சாட்சியாக விசாரிக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதது அரசுத் தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சம்பவ இடத்தில் பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் என்று அரசு தரப்பு சாட்சியான அசா.1 சாட்சியமளித்துள்ள நிலையில் எந்த தனி நபர்களும் எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கவில்லை. மேலும், அசா.1 தனது குறுக்கு

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.11 19:08:04 +0530

விசாரணையில் சம்பவ இடத்திற்கு கிழக்கே வெங்கடாசலபதி ரைஸ்மில் இல்லை என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அசா.4 தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்திற்கு கிழக்கே வெங்கடாசலபதி ரைஸ்மில் உள்ளது என்று சாட்சியமளித்துள்ளது முரண்பாடாக உள்ளது.

16) பொதுவாக, ஒரு இடத்தை போலீசார் சோதனை செய்யும் போதோ அல்லது எதிரியை சோதனை செய்யும் போதோ அல்லது வழக்கு சொத்தை கைப்பற்றும் போதோ சாட்சியாக இருக்கும் பொருட்டு தனிநபர்களை அழைக்க போலீசார்களுக்கு BNSS பிரிவு 103 கீழ் சட்ட உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின் படி ஒரு வழக்கு சம்பந்தமாக போலீசார் சோதனை செய்யும் போதோ அல்லது வழக்கு சொத்தை கைப்பற்றும் போதோ தனி நபர்கள் யாரேனும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அழைக்கப்பட்டும் அவ்வாறு அவர்கள் சாட்சியாக இருக்க முன்வராத பட்சத்தில் அவர்கள் மீது BNS பிரிவு 222-ன் கீழ் வழக்கு பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது. விசாரணை அதிகாரி சாட்சியாக இருக்க முன்வராத நபர்களின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதது அரசுத் தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சம்பவ இடத்தில் பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் என்பதாக அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியமளித்துள்ள நிலையில் நடுநிலையான சாட்சிகள் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை என்பது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைகிறது. பார்வை மகஜர் சாட்சிகள் இந்த வழக்கில் கையொப்பம் செய்துள்ள நிலையில் தனிநபர்கள் சாட்சியாக வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கு கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று அரசு தரப்பு வாதம் நம்பும்படியாக இல்லை.

17) மேலும், அசா.1, அசா.4 ஆகியோர் சம்பவ சமயத்தில் ரோந்து பணியில் இருந்ததற்கான ஆவணம் எதையும் விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அசா.1 மற்றும் அசா.4 ஆகியோர்கள் காவல்துறை சாட்சிகள் ஆகும். இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக நடுநிலையான சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி மது விற்பனை செய்ததாக பொதுமக்கள் யாரும் எதிரிக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் நடுநிலையான சாட்சிகள்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.11 19:08:13 +0530

விசாரிக்கப்படவில்லை என்பதால் அத்தாட்சி மூலம் வழக்கு சொத்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற அரசு தரப்பு வழக்கு நம்பும்படியாக இல்லை. காவல்துறை சாட்சிகளை வைத்து மட்டும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது நீதியின் நலன் கருதி சரியாக இருக்காது.

18) இந்த வழக்கில் எதிரியிடம் சோதனை செய்வதற்கு அவருக்கு ஆட்சேபனை இல்லை என்று சம்மத கடிதம் எதிரியிடம் பெற்றதாக எந்த ஆவணமும் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு தரப்பு வழக்கு உண்மையாக இருந்திருந்தால் நடுநிலை சாட்சிகள் எதிரிக்கு எதிராக சாட்சியமளித்திருப்பார்கள். அசா.1 மற்றும் அசா.4 ஆகிய சாட்சிகள் குறுக்கு விசாரணையில் முரண்பாடுடன் சாட்சியமளித்துள்ளதால், அவர்களின் முதல் விசாரணையின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. எதிரி உண்மையில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அரசு தரப்பு சாட்சிகள் முரண்பாடுகளின்றி சாட்சியமளித்திருப்பார்கள். இந்த வழக்கில் நடுநிலையான சாட்சிகள் இல்லாத நிலையில் காவல்துறை சாட்சிகளை வைத்து மட்டுமே வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது.

19) முடிவில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 4(1)(A), 4(1)(i) of TNP Act கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி அல்ல என BNSS பிரிவு 271(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20) இவ்வழக்கில் பி.ஆர்.எண்.743/2024 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசா.பொ.1 முதல் அசா.பொ.3 யை மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் அரசுக்கு ஆதாயப்படுத்த உத்தரவிடப்படுகிறது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:08:35 +0530

21) இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் BNSS பிரிவு 481–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரி BNSS பிரிவு 481ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:08:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திரு. அய்யாசாமி (தலைமைக் காவலர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | கண்ணுற்ற சாட்சி |
| 2. | திரு. மாடசாமி | பார்வை மகஜர் சாட்சி |
| 3. | திரு. சோலையப்பன் | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | திரு. சண்முகம் (உதவி ஆய்வாளர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | கண்ணுற்ற சாட்சி மற்றும் விசாரணை அதிகாரி |

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:08:52 +0530

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | பார்வை மகஜரில் உள்ள அசா.2 ன் முதல் கையொப்பம் – 09.11.2024 | அ.சா.2 – 20.06.2025 | அசல் |
| 2 | அத்தாட்சி – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 | அசல் |
| 4 | பார்வை மகஜர் – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 | அசல் |
| 6 | படிவம் 91 – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:**

| சான்றுப் பொருள் எண் | சான்றுப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் மூலம் / சான்றளித்தவர் மூலம் |
|---|---|---|
| 1. | பி.ஆர்.எண்.743/2024 வரிசை எண்.1 ல் தாக்கல் செய்யப்பட்ட 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் – 2 எண்ணம் – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 |
| 2. | பி.ஆர்.எண்.743/2024 வரிசை எண்.2 ல் தாக்கல் செய்யப்பட்ட 180 மிலி அளவு கொண்ட ஓரியன் பிராந்தி பாட்டில்கள் – 2 எண்ணம் – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 |
| 3. | பி.ஆர்.எண்.743/2024 வரிசை எண்.3 ல் தாக்கல் செய்யப்பட்ட பணம் ரூ.200/– – 09.11.2024 | அ.சா.4 – 08.08.2026 |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:09:05 +0530

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.11 19:09:13 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி